கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.

முன்னிலை – **திரு.எம்.விக்னேஷ் பிரபு, எம்.எல்.,**
**கூடுதல் சார்பு நீதிபதி, செய்யாறு.**

2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள், 5 ஆம் நாள் புதன்கிழமை

I.A.No.1/2024 in O.S.No.412/2019

1. தமிழரசி,
2. சுப்பிரமணியன்,
3. தனஞ்செழியன் . . . . மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. துளசிமணி (எ) கிரிஸ்டினோ லிண்டோ
2. M.முகம்மது ரபி,
3. S.மொய்தீன்,
4. P.மோகன்,
5. R.சரவணன்,
6. S.சங்கர் கணேஷ் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் 17.02.2025 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.பாண்டியன் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.நம்பி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 18 விதி 17–ன் கீழ் வா.சா.2ஐ திரும்ப அழைத்து விசாரணை செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர் அசல் வழக்கில் 3ம் வாதி என்றும், 1ம் வாதி சகோதரி,

2ம் வாதி மனுதாரரின் சகோதரர் ஆவார்கள். தாவா தாக்கல் செய்தபோது தன் சகோதரி கையில் கிடைத்த ஆவணங்களை தாக்கல் செய்தார் என்றும், அதன் பிறகு மனுதாரரின் சகோதரியையும், மனுதாரரையும் விசாரித்தபோது கற்றறிந்த எதிர்தரப்பு வழக்கறிஞர் நாங்கள் தாவா சொத்தினை அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டனவா என கேள்விகளை கேட்டதால் அதன்பின்பு ஆவணங்களை தேடிப்பார்த்தபோது சில முக்கிய அசல் ஆவணங்கள் தற்போதுதான் கிடைக்கப்பெற்றன என்றும், மேற்படி ஆவணங்களை கூடுதல் ஆவணங்களாக ஏற்றுக்கொள்ள தனி மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி ஆவணங்களை குறியீடு செய்யும் பொருட்டு தன்னை மீண்டும் அழைத்து விசாரணை செய்யவேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்ள அனுமதித்தால் அவைகள் குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் தன்னை மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்ஹ ஏற்படும் என்பதால் எதிர்மனதாரருக்கு எவ்வித பாதகமும், இழப்பும் ஏற்படாது என்றும், மேற்சொன்ன சந்தர்ப்பங்களை அனுசரித்து மனுதாரர்/3ம் வாதியை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய உத்தரவிட வேண்டியது அவசியமும் நியாமும் ஆகின்றது என்றும், இல்லையேல் ஈடுசெய்யமுடியாத இழப்பும், கஷ்டங்களும் உண்டாகும் என்று மனுதாரரால் மனு தாக்கல்.

3. <u>5ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 1 முதல் 4 மற்றும் 6 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்உரையின் சுருக்கம்</u>

மனுதாரரின் மனு பொய்யானது, மோசவிதமானது என்றும், சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல தள்ளுபடி செய்யப்படவேண்டிய ஒன்றாகும் என்றும், எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொண்ட விஷயங்கள் தவிர மற்றவற்றை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவர் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் மனுதாரர்களின் சுவாதீன உரிமையை நிலைநிறுத்தும் ஆவணங்கள் அல்ல என இவ்எதிர்மனுதாரர்கள் தெரிவிக்கிறார்கள் என்றும், 2, 3 மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி நடத்திவந்த செங்கல் சூளையில் உறவினர்கள் என்ற முறையில் வேலை செய்து வந்தார்கள் என்றும், மேற்படி வேலை செய்து வரும் நாட்களில் செங்கல் சூளை சம்மந்தமாக எடை போடும் நிறுவனம் 3ம் மனுதாரர் பெயரில் வழங்கியுள்ள ஒரு சில

இரசீதுகளில் சுப்பிரமணி என்ற பெயர் உள்ளதால் மட்டும் அது 2ம் வாதியை குறிப்பதாக கூற இயலாது என்றும், 3ம் எதிர்மனுதாரர் பெயரில் சில இரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டு இருப்பதாலேயே அவை 3ம் எதிர்மனுதாரரை குறிப்பதாக ஏற்க முடியாது என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் தற்போது அவர்களால் உருவாக்கப்பட்டவை அவை செல்லத்தக்கவை அல்ல என்றம், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மின்கட்டண அட்டை மற்றும் மின் பயன்பாட்டுக்கு செலுத்திய இரசீதுகள் அனைத்தும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி பெயரில் மட்டுமே வழுங்கப்பட்டுள்ளன என்றும், மனுதாரர்கள் செங்கல் சூளையில் மேற்பார்வை செய்து வந்த காரணத்தினால் 1ம் எதிர்மனுதாரரால் செலுத்தப்பட்ட இரசீதுகளை எடுத்து சென்று உள்ளார்கள் என்றும், மேற்படி இரசீதுகள் 1ம் எதிர்மனுதாரர் மின் பயன்பாட்டுக்கு செலுத்திய தொகைக்கான இரசீதுகள் என்றும், அவை மூலம் மனுதாரர்கள் எந்தவித உரிமையையும் கோர இயலாது என்றும், எனவே மேற்படி இரசீதுகள் ஏற்கப்படக்கூடிய ஆவணங்கள் அல்ல என நிராகரிக்கப்பட வேண்டும் என இவ்எதிர்மனுதாரர்கள் கூறுகிறார்கள் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள Electrical மற்றும் Hardward கடைகளின் இரசீதுகள் எதிலும், மனுதாரர்கள் பற்றிய விவரமோ கடைக்காரரின் கையொப்பமோ இல்லை என்றும், மேற்படி மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் தற்போது மனுதாரர்களால் உருவாக்கப்பட்டவை ஆகும் என்றும், உண்மையில் மனுதாரர்களுக்கு 1ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான தாவா சொத்தை அபகரிக்க மனுதாரர்கள் முயற்சிக்கிறார்கள் என்றும், எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆன்சரிலேயே 1ம் எதிர்மனுதாரர் தனக்கு சொந்தமான மண்ணை நிரவி கொள்ளும்படி 2 முதல் 6 மனுதாரர்களுக்கு தாவா சொத்தை கிரையம் செய்தபோதே கூறிவிட்டார் என்றும், அதன்படி கிரையம் பெற்ற காலத்திலேயே 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள் மண்ணை நிரவி நிலத்தை சீர்செய்து உள்ளனர் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள போட்டோக்கள் ஏற்கக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றும், அவை எவ்வகையி'லும் எதிர்மனுதாரர்களுக்கு தாவா சொத்தில் உள்ள உரிமையை மறுக்கக்கூடிய ஆவணங்கள் அல்ல என்றும், தாவா சொத்தில் இருந்த மண் 1ம்

பிரதிவாதிக்கு சொந்தமானதாகும் என்றும், அதில் மனுதாரர்கள் உரிமை கோர முடியாது என்றும், தாவா சொத்தில் பம்பு செட் கட்டுவதற்காக கட்டுமான பொருட்கள், பம்பு செட் மோட்டார் செங்கல் சூளையில் விறகு வாங்கி செலவு ஆகிய செலவினங்கள் அனைத்தும் 1ம் பிரதிவாதி செங்கல் சூளையின் உரிமையாளர் என்ற முறையில் செலவு செய்தார் என்றும், மனுதாரர்கள் 1ம் பிரதிவாதியிடம் சம்பளத்திற்க வேலை செய்த உறவினர்கள் என்பதால் இரசீதுகளை எடுத்து சென்று உள்ளனர் என்றும், தற்போது மேற்படி செலவினங்களை மனுதாரர்கள் செய்ததாக பொய்யான தகவல்களை தெரிவிக்கின்றனர் என்றும், செங்கல் சூளையில் மனுதாரர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றும், தற்போது குறுக்கு விசாரணை முழுவதும் முடிந்து விட்ட நிலையில் வேண்டும் என்றே இடைவெளிளை நிரப்பும் வகையில் மேற்படி மனுக்களை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மேற்படி ஆவணங்களுக்கும் மனுதாரர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும், வேண்டும் என்றே வழக்கை காலதாமதம் செய்ய எண்ணி இம்மாதிரி மனுக்களை தாக்கல் செய்துள்ளனர் என்றும், மனதாரர்கிள் மனுவானது எதிர்மனுதாரர்களின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி எதிர்மனுதாரர்கள் பரம் எதிர்உரை தாக்கல்.

4. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இருதரப்பில் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகளும், எதிர்மனுதாரர்கள் பிரதிவாதிகளும் ஆவார்கள். மனுதாரர்கள்/வாதிகள் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக தாவா சொத்தைப் பொறுத்து பாதி பாகம் வாதிகளுக்கு பாகஉரிமையுள்ளது என முதல்நிலை தீர்ப்பானை பிறப்பிக்க வேண்டியும் மற்றும் இதர பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு 18.11.2021 தேதியன்று எழுவினாக்கள் வனையப்பட்டு வாதிகள் தரப்பில்

வா.சா.ஆ.1 முதல் 3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு மேற்படி சாட்சிகள் குறுக்குவிசாரணை செய்யப்பட்டு மேற்கொண்டு வாதிகள் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்வதற்காக அசல் வழக்கானது நிலுவையில் இருந்து வந்தநிலையில் மனுதாரர்கள் இம்மனுவுடன் தாக்கல் செய்யும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுகொண்டு வா.சா.ஆ.2ஐ மீண்டும் அழைத்து விசாரித்து அசல் வழக்கை மேல் நடத்த வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

6. மனுதாரர் தன் மனுவில் தாவா சொத்தினை அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டனவா என குறுக்குவிசாரணை செய்தபொழுது கேள்விகளை கேட்டதால் அதன்பின்பு ஆவணங்களை தேடிப்பார்த்தபொழுது லாரி செங்கற்கள் விறகுகட்டைகள் எடை போட்டதற்கான பில்கள் மின்கட்டண ரசீதுகள் கிடைக்கப்பட்டது என்றும், மேற்படி ஆவணங்கள் வழக்கு பிரச்சனைகளை தீர்க்க உதவிகரமாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும் மனுதாரர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், அசல் வழக்கினை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. மனுதாரர் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான எலெட்ரீக் நடைமேடை பில்கள், மின்சாதனப் பொருட்கள் ரசீதுகள், பம்பு செட் கட்டிடம் கட்டுவதற்கு செலவு செய்த தொகை விவரங்கள், மின்கட்டண அட்டை, மின்கட்டண ரசீதுகள் டிரான்ஸ்போர்ட் ரசீதுகள் மற்றும் எர்த்மூவர்ஸ் ரசீதுகள் அசல் வழக்குக்கு முக்கியமான ஆவணங்கள் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளார். மேற்படி ஆவணங்களை பரிசீலித்துப் பார்க்கும்பொழுது அந்த ஆவணங்களில் மனுதாரர்/வாதியின் பெயரோ வழக்கு சொத்து சர்வே எண். குறித்தோ எந்தவொரு குறிப்பும் காணப்படவில்லை. மேலும் மனுதாரர்கள் மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்து அந்த ஆவணங்கள் அசல் வழக்கிற்கு தொடர்புடைய ஆவணங்கள் என்று தெரிவித்துள்ளாரே தவிர மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அசல் வழக்கிற்கும், மனுதாரருக்கும் எவ்வகையில் தொடர்புடைய ஆவணங்கள் என்பது குறித்து மனுவில்

விவரித்துக் கூறவில்லை.

7. மேலும் மனுதாரரே தன் மனுவில் தாவா சொத்தினை அனுபவம் செய்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டனவா என கேள்விகளை கேட்டதால் கூடுதல் ஆவணங்களை தாக்கல் செய்வதாக ஒத்துக்கொண்டுள்ளார். வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சாட்சிகள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் முழுமையாக குறுக்குவிசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்படும் கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டும் என்று கூறுவதும் ஏற்பதற்கில்லை. ஏனென்றால் வழக்கில் சாட்சிகள் ஏற்கனவே விசாரிக்கப்பட்டு எதிர்தரப்பினரால் குறுக்குவிசாரணை முழுவதுமாக செய்யப்பட்டதற்கு பிறகு அவ்வாறு சாட்சிகள் குறுக்குவிசாரணையில் அளித்துள்ள சாட்சியத்தில் உள்ள இடைவெளிகளை நிரப்பும் வகையில் சாட்சிகளை மீண்டும் அழைத்து விசாரிக்க வேண்டும் என்றுதாக்கல் செய்யப்படும் மனுக்களைப் பொறுத்து நீதிமன்றம் அனுமதிக்ககூடாது என்று மாண்பமை உயர்நீதிமன்றம் ஏற்கனவே பல முன் தீர்ப்புகளில் கூறியிருக்கிறது. அந்தவகையில் வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் வழக்கு சொத்து அனுபவம் குறித்து அளித்துள்ள சாட்சிகயத்தின் இடைவெளிகளை நிரப்பிக்கொள்ளும் விதமாக மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்று மிகத்தெளிவாக தெரியவருவதாலும், மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்புடையதாக இல்லை என்பதாலும், மனுதாரர்கள் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கும், வழக்கு சொத்திற்கும் மனுதாரர்களுக்கும் எவ்வகையில் தொடர்பு என்பதை மனுதாரர்கள் தன் மனுவில் விவரித்து கூறவில்லை என்பதாலும், மனுதாரர்கள் இம்மனுவுடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்று வா.சா.2 ஐ மீண்டும் அழைத்து விசாரித்து அசல் வழக்கினை மேல்நடத்த வேண்டும் என்று தாக்கல் செய்துள்ள இம்மனுவானது அனுமதிப்பதற்கு எவ்வித முகாந்திரமும் இல்லை என்பதால் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இறுதியாக மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவானது செலவுதொகையின்றி தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் 2025–ம் ஆண்டு மார்ச் மாதம் 5–ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/– XXX( எம்.விக்னேஷ் பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**
**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் : இல்லை**

ஓம்/– XXX( எம்.விக்னேஷ் பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

/உண்மை நகல்/

ஓம்/– XXX( எம்.விக்னேஷ் பிரபு)
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.